சுருக்கம்

தமிழ் வளர்ச்சி – தமிழின் வாய்ப்பாட்டு மரபை அடுத்த தலைமுறையினருக்குக் கொண்டு சேர்க்கும் வண்ணம் அறநிலையத் துறையால் திருக்கோயில்களில் நடத்தப்பட்டு வரும் தேவாரம், திருவாசகம், திவ்வியப் பிரபந்தம் ஆகியவற்றோடு திருக்குறள் வகுப்புகளும் இணைந்து நடத்துதல் - ஆணை - வெளியிடப்படுகிறது.

---

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி(த.வ 1.2)த் துறை

அரசாணை (நிலை) எண்.146 நாள் 10.11.2021

பிலவ, ஐப்பசி-24

திருவள்ளுவராண்டு 2052

படிக்கப்பட்டது:

1. தமிழ் வளர்ச்சி இயக்குநரின் கடிதம் எண்.7815/ஆமொ1/2021, நாள். 04.10.2021.
2. இந்து சமய அறநிலையத்துறை ஆணையரின் கடிதம் எண்.68925/2021/டபிள்யு2, நாள் 25.10.2021.

******

ஆணை:

2021-2022-ஆம் ஆண்டுக்கான தமிழ் வளர்ச்சித் துறையின் மானியக் கோரிக்கை 46-இன் போது மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களால் கீழ்க்கண்ட அறிவிப்பு அறிவிக்கப்பட்டது :-

**"தமிழின் வாய்ப்பாட்டு மரபை அடுத்த தலைமுறையினருக்குக் கொண்டு சேர்க்கும் வண்ணம் திருக்கோயில்களில் தேவாரம், திருவாசகம், திவ்வியப் பிரபந்தம் ஆகியவற்றோடு திருக்குறள் வகுப்புகளும் அறநிலையத் துறையுடன் இணைந்து நடத்தப்படும்".**

2) மேற்படி அறிவிப்பினை செயல்படுத்துவது தொடர்பாக தமிழ் வளர்ச்சி இயக்குநர் அவர்கள் முதலாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் அவர்கள் அன்னதானத் திட்டம் நடைபெறும் அனைத்து திருக்கோயில் செயல் அலுவலர்களும் வாரந்தோறும் சனி மற்றும் ஞாயிறு ஆகிய கிழமைகளில் ஆன்மீக பயிற்சி

வகுப்பு நடத்துவதோடு திருக்குறள் மற்றும் திருக்குறள் தெளிவுரை கற்றுத் தரவும் ஆன்மீக ஆசிரியர்களுக்கு தக்க அறிவுரை வழங்கப்பட்டுள்ளது என்றும், ஆன்மீக வகுப்பு நடத்தும் ஆசிரியர்களுக்கு வகுப்பு ஒன்றுக்கு ரூ.200/- வீதம் வழங்கிடவும், பயிற்சி பெறும் மாணவர்களுக்கு சிற்றுண்டி வழங்குவதற்கு ரூ.300/- வீதம் வரவு செலவு திட்டப்படி செலவினை மேற்கொள்ளவும் அறிவுறுத்தப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார் என தமிழ் வளர்ச்சி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

3) மேலும் தமிழ்நாட்டில் இந்து சமய அறநிலையத் துறையின் கீழ் வரும் 714 திருக்கோயில்களில் அன்னதானத் திட்டம் செயல்படுவதாகவும், அன்னதானத்திட்டம் செயல்படும் அனைத்து திருக்கோயில்களிலும் ஏற்கெனவே நடத்தப்பெறும் தேவாரம், திருவாசகம், திவ்வியப் பிரபந்தம் ஆகிய வகுப்புகளுடன் திருக்குறள் வகுப்புகளையும் சேர்த்து நடத்தலாம் என்றும், இதற்கென ஏற்படும் செலவினங்கள் அந்தந்த திருக்கோயில் நிதி மூலம் மேற்கொள்ளப்படலாம் எனவும் தமிழ் வளர்ச்சி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

4) அரசின் கவனமான பரிசீலனைக்கு பின்னர், இந்து சமய அறநிலையத்துறையின் நிருவாகத்தின் கீழ் வரும் திருக்கோயில்களில் அன்னதானத்திட்டம் செயல்படும் அனைத்து திருக்கோயில்களிலும் ஏற்கெனவே நடத்தப்பெறும் தேவாரம், திருவாசகம், திவ்வியப் பிரபந்தம் ஆகிய வகுப்புகளுடன் திருக்குறள் வகுப்புகளையும் இணைத்து நடத்திடவும், இதற்கான மதிப்பூதியம் மற்றும் சில்லரை செலவினங்கள் அந்தந்த திருக்கோயில் நிதி மூலம் மேற்கொள்ளவும் ஆணையிடப்படுகிறது.

5) இவ்வாணை சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையத் துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண்.10871/அநி1.1/2021-2, நாள் 01.11.2021-இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

மகேசன் காசிராஜன்,

அரசு செயலாளர்.

பெறுநர்

இயக்குநர்(மு.கூ.பொ), தமிழ் வளர்ச்சி இயக்ககம், சென்னை-8.

ஆணையர், இந்து சமய அறநிலையத் துறை, சென்னை-34.

செயல் அலுவலர்கள், அன்னதானம் திட்டம் செயல்படுத்தப்படும்

அனைத்து திருக்கோயில்கள்

(ஆணையர், இந்து சமய அறநிலையத் துறை வழியாக)